DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | : | **O.S :46/2017** | | |
| Deposition of Witness | | : | **வா.சா. 6** | | |
| Name | : | செல்வபிரியா | Caste | : | |
| Father's Name/ Husband | : | | Calling | : | கிராம நிர்வாக அலுவலர் |
| Village | : | அணைக்குடி திருநாகேஸ்வரம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 05-01-2024

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். நான் அணைக்குடி திருநாகேஸ்வரத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அணைக்குடி திருநாகேஸ்வரம் புல எண் 62/5 ற்கான நத்தம் சிட்டா, நத்தம் அடங்கல் ஆகிய பதிவேடுகளை இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். சிட்டாவில் புல எண் 62/5 தற்பொழுது திருவேங்கடம் மகன் உப்பிலி ராஜ் என்பவர் பெயரில் உள்ளது. இதற்கு முன்னர் ராமானுஜம் செட்டியார் மகன் ராமசாமி செட்டியார் என்பவர் பெயரில் இருந்தது. எதனடிப்படையில் இவ்வாறு பெயர் மாற்றம் உப்பிலி ராஜ் பெயரில் செய்யப்பட்டது என்றால் அடங்கலில் நி.மு.ப.மா 546/2002 நாள் 04/03/2002 இன் படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த Proceedings நகல் 2002 இல் நடைபெற்றதால் தற்சமயம் என்னிடம் இல்லை. அசல் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட சிட்டா நகல் **சா.சா.ஆ.3 ஆகும். அடங்கல் நகல் சா.சா.ஆ.4 ஆகும்.**

**குறுக்கு விசாரணை**

வருவாய் துறையில் உரிய ஆவணங்களின் அடிப்படையில் தான் சிட்டா, அடங்கல் பெயர் மாற்றம் செய்யப்படும் என்றால் சரி. உப்பிலிராஜ் பெயரில் உரிய ஆவணங்களின் அடிப்படையில் தான் ஏற்கனவே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதனடிப்படையில் தான் நீதிமன்றத்தில் நான் சா.சா.அ.3 மற்றும் சா.சா.ஆ. 4 யை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம்.

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/
ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.